உ

# இந்து சமய மன்றம்

ஸ்ரீ காஞ்சி காமகோடி சங்கர மடத்தின் சமயச்சேவை நிறுவனம்

**நந்திவரம் - கூடுவாஞ்சேரி கிளை**

[இணைப்பு எண் — 220 CGL]



**ஜகத்குரு ஸ்ரீ ஆதிசங்கர பகவத் பாதர்**

ச்ருதி ஸ்ம்ருதி புராணானாம் ஆலயம் கருணாலயம்
நமாமி பகவத் பாத சங்கரம் லோக சங்கரம்.

## ஸ்ரீ சங்கர ஜயந்தி

மற்றும்

## ஸ்ரீ காஞ்சி மாமுனிவர் நூற்றாண்டு விழா

## சிறப்பு மலர்

# 1993

ஹர ஹர சங்கர !
காலடி சங்கர !
காமாட்சி சங்கர !

உ
ஸ்ரீ குருப்யோ நம !

ஜய ஜய சங்கர !
காஞ்சி சங்கர !
காமகோடி சங்கர !





ஸதாசிவ ஸமாரம்பாம் ஸங்கராச்சார்ய மத்யமாம் !
அஸ்மத் ஆசார்ய பர்யந்தாம் வந்தே குரு பரம்பராம் !!

# சமர்ப்பணம்

திருநந்திகேஸ்வரம் (நந்திவரம்) ஸ்ரீ ஸௌந்தர்யநாயகி ஸமேத ஸ்ரீ நந்தீஸ்வர பெருமானின் திருக்கோயிலில் 1993ம் ஆண்டு நடைபெற்ற **ஜகத்குரு ஸ்ரீ ஆதிசங்கரர்** ஜெயந்தி மற்றும் **ஸ்ரீ காஞ்சி பரமாச்சார்யார்** நூற்றாண்டு விழாவை முன்னிட்டு இச்சிறப்பு மலரை நந்திவரம் - கூடுவாஞ்சேரி இந்துசமய மன்றத்தின் சார்பில் காஞ்சி ஆசார்ய மும்மூர்த்திகளின் திருவடிகளில் சமர்ப்பணம் செய்து வெளியிடுகிறோம்.

இவண்,

புலவர் **கயிலை இராஜகணபதி** B.A ,B.Com., F.I.C.A. D.S S.
தலைவர்

புலவர் **க. ஆத்ரேய சுந்தரராமன்** (எ)
**க. இராகவன்,** B.A., D.C.P., D.S.S.
செயலாளர்.

செயற்குழு உறுப்பினர்கள் :

திரு C. **பழனி**, கூடுவாஞ்சேரி Govt. Press.
திரு N. **வேதமூர்த்தி** B.Com., நந்தீஸ்வரர் நகர்
திரு V. **இராஜகோபால்**, D P T. நந்தீஸ்வரர் நகர்
திரு M. **லக்ஷ்மிபதி** நந்திவரம்
திரு V **குமரேசன்** B Com., (M.A.) கூடுவாஞ்சேரி
திரு K. **மாணிக்கம்** B.Sc., நந்திவரம்
திரு L. **புண்ணியகோட்டி**. நந்திவரம்
திரு V. **மயூரநாதன்** B. Com., இராணி அண்ணா நகர்
திருமதி **மாலினி லோகரஞ்சன்** B. Sc., D.P.R., கூடுவாஞ்சேரி

உ

ஸ்ரீ குருப்யோ நம :



# ஆன்மீக பணியில்

அன்புடையீர்,

இந்து சமய மன்றத்தின் சார்பில் ஸ்ரீ காஞ்சி ஆசார்ய மும்மூர்த்திகளின் அருளாசியுடன் ஐந்தாம் ஆண்டு **ஸ்ரீ சங்கர ஜயந்தி ஸ்ரீ பரமாச்சார்ய ஸ்வாமிகளின்** நூற்றாண்டு விழா சிறப்பு மலரை மகிழ்ச்சியுடன் வெளியிடுகிறோம். இம்மலரில் **ஸ்ரீ ஸ்தோத்ர சிந்தாமணி** என்ற எளிய துதிப்பாடல் தொகுப்பை வெளியிட்டுள்ளோம். மிக விரைவாக பூஜை செய்ய முடியாதவர்களுக்கும் உபயோகமாகும் வகையில் பலன் தரும் துதிகளின் தொகுப்பை வெளியிட்டுள்ளோம். இவற்றை பாராயணம் செய்து பலனடைய வேண்டுகிறோம்.

இம்மன்றத்தின் பணிசிறக்க எங்களுக்கு ஆக்கமும், ஊக்கமும் அளித்து சமயப்பணியாற்றிவரும் இந்து சமய மன்ற மாநில அமைப்பாளர் 'செஞ்சொல்மணி' புலவர் திரு. **பு.மா.ஜய செந்தில் நாதன்** M.A. B.Ed , அவர்களுக்கு எங்கள் மனமார்ந்த நன்றிகள். மன்றத்தின் வேண்டுகோள் ஏற்று சமய சொற்பொழிவுகள் மற்றும் இன்னிசை நிகழ்ச்சிகள் நடத்திய அனைத்து மெய்யன்பர்களுக்கும், சான்றோர்களுக்கும் எங்கள் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறோம்

மன்றத்தின் பணிகளில் மேன்மேலும் பங்குகொண்டு சமயப் பணியும், இறைபணியுமாற்றிட அனைவரையும் அழைக்கிறோம்.

இவண்.

**இந்து சமய மன்ற நிர்வாகிகள்**
மற்றும் **செயற்குழு,**
நந்திவரம் — கூடுவாஞ்சேரி.

உ

ஸ்ரீ குருப்யோ நம;

# ஸ்ரீ சங்கரர் வரலாறு

ஸ்ரீ பரமேஸ்வரனின் அவதாரமாக இக்கலியுகத்தில் இந்து தர்மம் நிலைபெறவும். வேதநெறி தழைத்தோங்கவும் தோன்றியவர் ஸ்ரீ ஆதிசங்கரர். சிவகுரு, ஆர்யாம்பாள் என்னும் தம்பதியர்க்கு மகவாக கேரள மாநிலம் காலடி என்னும் சிற்றூரில் அவதரித்தார் ஏழு வயதிற்குள் சாஸ்திரமனைத்தும் கற்றார். ஏழைப் பெண்ணொருத்திக்காக ஸ்ரீ கனகதாரா ஸ்தவம் பாடி பொன்மழை பொழிவித்தார். பின்பு நர்மதா நதி தீரத்தில் ஸ்ரீ கோவிந்த பகவத்பாதரை குருவாக ஏற்று அத்வைத சாஸ்திரம் கற்று ஸந்யாஸ தீக்ஷை பெற்றார். காசியில் பிரம்ம ஸூத்திரத்துக்கு அத்வைத ப்ரமாண பாஷ்யம் செய்தார். பல அறிஞர்களை வாதில் வென்று பாரத தேசமெங்கும் விஜயம் செய்தார். ஸாஸ்திர விரோத மதங்களைக் கண்டித்து "பிரம்ம ஸத்யம்". "ஜகத்மித்யை" "மனிதனும் தெய்வமாகலாம்" என்பதை போதித்தார். காணபத்யம், கௌமாரம், சைவம், வைணவம் சாக்தம், சௌரம் என ஆறு மதங்களை ஸ்தாபித்தார். பல கோயில்களில் யந்த்ர பிரதிஷ்டை செய்தார். ஸ்ரீ சௌந்தர்ய லஹரி, ஸ்ரீ சிவானந்த லஹரி, ஸ்ரீ பஜகோவிந்தம், ஸ்ரீ பகவத்கீதா பாஷ்யம், ஸ்ரீ விவேக சூடாமணி போன்றவை அவருடைய ஒரு சில புகழ் பெற்ற நூல்களாகும். தம் பிரதான நான்கு சிஷ்யர்களை வைத்து பாரதத்தின் நான்கு திக்குகளில் நான்கு மடங்களை ஸ்தாபித்து அத்வைத நெறி பரவ ஏற்பாடு செய்தபின் காஞ்சீபுரம் சென்று காமாக்ஷியை வணங்கி காமகோடி பீடத்தில் அமர்ந்து தமது 32ம் வயதில் பராசக்தியுடன் இரண்டறக் கலந்தார். காஷ்மீரத்திலும், காஞ்சியிலும் ஸர்வக்ஞ பீடமேறி அத்வைதத்தை நிலைநாட்டியுள்ளார். முப்பத்திரண்டு கோடி மக்கள் 32 யுகங்களில் செய்ய முடியாத சாதனையை அவரொருவரே 32 ஆண்டுகளில் செய்தார். இன்றுள்ள இந்து மதம் அவரால் புனரமைக்கப்பட்ட மதமேயாகும். சிங்கம் முழங்கும்போது காட்டிலுள்ள அனைத்து உயிர்களும் அமைதியாவது போல் அத்வைத் தத்துவத்தை வேறு எதனாலும் எதிர்க்க இயலாதென சொல்லப்படுவதிலிருந்து ஸ்ரீ சங்கரரின் சாதனை தெளிவாகின்றது. விரிவஞ்சி மிகச் சுருக்கமாக அவரது திவ்விய சரிதத்தை எழுதியுள்ளோம்.

ஜய ஜய சங்கர ! ஹர ஹர சங்கர !

# இந்து சமயமன்ற இறை பணிகள்

1. புராதன திருக்கோயில்களில் உழவாரம் பணி மற்றும் புனர் நிர்மாணப் பணிகள் செய்தல்.
2. புராதன திருக்கோயில்களில் திருவிழாக்கள் செவ்வனே நடக்க ஒத்துழைப்பு தருதல்.
3. ஸ்ரீ சங்கரரின் தத்துவ பக்தி நூல்களை மக்களிடையே பரப்புதல்
4. சமய வழிபாட்டு புத்தகங்கள் அச்சிட்டு இலவசமாக அளித்தல்
5. சமய பக்தி மற்றும் நீதி நூல்களில் மாணவர்கட்கு பல போட்டிகள் நடத்தி பரிசளித்தல்.
6. குழந்தைகளை இறைவன் திருநாமங்களைச் சொல்ல ஊக்குவித்து பரிசளித்தல்.
7. ஏழைக் குழந்தைகளின் கல்விக்கு உதவியளித்தல்.
8. நலிவுற்றோருக்கான சிறப்பு வழிபாடு நடத்தி பிரசாதம் அளித்தல்.
9. உலக அமைதிக்காக ஜப, வேள்விகள் நடத்துதல்.
10. தெய்வத்தமிழில். இந்து சமயத்தின் மேன்மையை உணர்த்திடும் வகையில் சொற்பொழிவாற்றும் புலவர்களுக்கு **"சொற்பொழிவு வித்தகர்"** எனும் விருது ஒவ்வொரு ஆண்டும் வழங்கி கௌரவிக்கப்படுத்துதல்,

இந்து சமய மன்றத்தின் துணை அமைப்பாக 'ஸ்ரீ நந்தீஸ்வர பக்த ஜன சபா' (24—2—91) அன்று தோற்றுவிக்கப்பட்டு சிறப்பாக இறைபணியாற்றி வருகிறது.

இந்து சமய மன்றத்தின் குழந்தைகள் அமைப்பாக 'ஸ்ரீ சங்கர வாணி வானொலி சிறுவர் சங்கம்' 18—5—91 அன்று தோற்றுவிக்கப் பட்டு சென்னை வானொலி நிலையத்தில் குழந்தைகள் நிகழ்ச்சிகளை தயாரித்தளித்து சிறப்பாக இயங்கி வருகிறது.

———

உ

இந்து சமய மன்றத்தின் சார்பில் நடைபெறும்

# ஸ்ரீ நந்தீஸ்வரர் திருக்கோயில் திருப்பணி



நாடகமா டிடநந்தி கேச்சுரமா காளேச்சுர
நாகேச்சுர நாகளேச்சுரநன் கான
கோடீச்சுரங் கொண்டீண் சுரந்தின் டீச்சுரங்
குக்குடேச் சுரமக்கீச் சுரங்கூ றுங்கால்
ஆடகேச்சுர மகத்தீச்சுர மயனீச்சுர
மத்தீச்சுரஞ் சீத்தீச்சுர மந்தண்கானல்
ஈடுதிரை இராமேச்சுர மென்றென் றேத்தி
இறைவனுலை சுரம்பலவும் இயம்புவோமே.

— 6 ஆம் திருமுறை, அடைவுத் தாண்டகம்

வ்ருஷபபுரி என்றும் திருநந்திகேஸ்வரம் என்றும் வழங்கப்படும் சுயம்புலிங்க க்ஷேத்ரமாகிய நந்திவரம் அருள்மிகு சௌந்தர்யநாயகி உடனுறை ஸ்ரீ நந்தீஸ்வரஸ்வாமி திருக்கோயில் சுமார் 1500 ஆண்டுகள் பழமையும் பெருமையும் உடையது. சைவ குரவர் ஸ்ரீ திருநாவுக்கரசு சுவாமிகளின் தேவாரத்தில் வைப்புத்தலமாக வைத்து பாடல் பெற்ற தலமாகும். தரும தேவதையான நந்தியால் பூஜிக்கப்பெற்ற இக்கோயில் இறைவனை இன்றும் இரவில் சித்தர்கள் பூஜிப்பதாக ஐதீகம். இக்கோயில் இறைவன் நம் காலத்து முனிவர்கள் ஸ்ரீகாஞ்சி பெரியவர்கள், ஸ்ரீலஸ்ரீ தருமபுர ஆதீன குருமஹா சன்னிதானம், ஸ்ரீலஸ்ரீ குன்றக்குடி அடிகளார், ஸ்ரீஈழ சித்தர் ஸ்வாமிகள், ஸ்ரீஸாதுராம் ஸ்வாமிகள், ஸ்ரீகாயத்ரி ஸ்வாமிகள், ஸ்ரீசங்கர ஸ்வாமிகள் மற்றும் பலமகான்கள் வந்து தரிசிந்துள்ளனர்.

இத்தகு பெருமைபெற்ற இத்திருக்கோயில் விமானத்தின் மீது கடந்த 1987ம் ஆண்டு இடி விழுந்து ஸ்வாமி விமானம் பழுதடைந்தது மிகுந்த சேதம் விளைந்திருக்கும். மக்களைக் காக்க மகேசனே அதனைத் மிகுந்த சக்த்யுடன் விழுந்த இடியால் சுற்றுப்புறங்களில் தன் விமானத்தில் தாங்கினாற்போல அதுமட்டுமே பழுதடைத்தது.

இடிவிழுந்த கோயிலில் ஆகம முறைப்படி பூஜை செய்ய கூடாதாகையால் நந்திவரம்—கூடுவாஞ்சேரி பகுதியில் சமய, சமூக பணியாற்றி வரும் ஸ்ரீகாஞ்சி காமகோடி சங்கர பீடத்தின் சமயச்சேவை அமைப்பான இந்துசமய மன்றம் ஸ்ரீகாஞ்சி ஆசார்ய மும்மூர்த்திகளின் அனுமதியுடனும் பாலாலய திருக்கோயில் கட்டி தெய்வ மூர்த்திகளை சிறிய உருவில் எழுந்தருளச்செய்து குடமுழுக்கு விழா நடத்தி ஸ்ரீஸ்வாமி, அம்பாள் விமான திருப்பணிகளை தொடங்கி 1992ல் முதற்கட்ட திருப்பணி நிறைவுற்றது.

முதற்கட்ட திருப்பணி நிறைவு விழாவிற்கு ஸ்ரீகாஞ்சிகாமகோடி பீடம் ஸ்ரீ ஜயேந்திர ஸரஸ்வதி ஸ்வாமிகள், பாலபெரியவர். ஸ்ரீசங்கர விஜயேந்திர ஸரஸ்வதி ஸ்வாமிகள் வருகைதந்து அருளாசி வழங்கியருளினார்கள். கோயில் பிரகாரங்கள் மற்றும் தெய்வ சன்னதிகள் திருப்பணி நன்கு நிறைவேறவும், விரைவில் திருக்குடமுழுக்கு விழா நடைபெறவும் ஆஸ்திக அன்பர்களின் ஒத்துழைப்பை வேண்டுகிறோம். அம்மையப்பன் தன் அருட்தொண்டில் சேர வாரும் ஜெகத்திரே !

இறைபணியில்

**இந்து சமய மன்றம்.**

நந்திவரம்—கூடுவாஞ்சேரி.

மேலும் விலரங்களுக்கு :

புலவர் **கயிலை இராஜகணபதி,**

தலைவர், இந்து சமய மன்றம், ஸ்ரீநந்திஸ்வரர் திருக்கோயில்,

நந்திவரம், கூடுவாஞ்சேரி அஞ்சல்,

பின்கோடு-603 202, செங்கை-எம்.ஜி.ஆர். மாவட்டம்.

---


எமது நல்வாழ்த்துக்கள் !

★

## சுந்தரம்மாள் நியூஸ் ஏஜென்ஸீஸ்

அனைத்து தினசரி, வார, மாத இதழ்கள் கிடைக்கும்.

விற்பனையாளர் :

அதிர்ஷ்டம், மாலை மலர், மாலை முரசு

G.S.T. ரோடு கூடுவாஞ்சேரி-603 202.

(கூடுவாஞ்சேரி பஸ் நிலையம் பின்புறம்)

உரிமை : R. **கபாலி.**


---

# ஸ்ரீ காஞ்சிப் பெரியவர் வரலாறு



ஸ்ரீ ஜகத்குரு ஆதிசங்கரரின் அவதாரமாக 1894ஆம் ஆண்டு மே மாதம் 20ம் நன்னாளில் விழுப்புரத்தில் அனுஷ நட்சத்திரத்தில் சுப்பிரமணிய சாஸ்திரிகளுக்கும், மஹாலக்ஷ்மி அம்மையாருக்கும் திருமகனாக அவதரித்தார். திண்டிவனம் அமெரிக்க மிஷன் பள்ளியில் கல்வி பயிலும் போது பைபிளில் தேர்ச்சிபெற்று முதல் பரிசும் நாடகத்தில் நடிக்கும் திறமையும், புத்தி கூர்மையும் ஒருங்கே வாய்க்கப்பெற்ற இவருக்கு பெற்றோர் இட்டபெயர் ஸ்வாமிநாதன் என்பதாகும். 1906ல் தங்கள் ஊருக்கு அருகாமையில் முகாமிட்டிருந்த அப்போதைய காஞ்சி காமகோடி பீட ஸ்வாமிகளை தரிசிக்க பெற்றோருடன் சென்ற ஸ்வாமிநாதனை பார்த்த உடன் அப்போதைய ஸ்வாமிகள் இவரைப் பீடாதிபதியாக்க முடிவு செய்தார்.

அடுத்த ஒருவருடத்திற்குள் அப்போது பீடத்தை அலங்கரித்து வந்த ஸ்வாமிகள் சித்தியடைந்து விட உடன் ஸ்ரீமஹா தேவேந்திர ஸரஸ்வதி ஸ்வாமிகள் பீடாதிபதியானார். அவர்தன் குருநாதரின் உள்ளகிடக்கையை ஏற்று ஸ்வாமிநாதனை பீடாதி பதியாக்கி ஏழே நாளில் முக்திடைந்தார். 1907ல் காஞ்சி மடத்தின் 68வது பீடாதீஸ்வரராய் ஸ்ரீசந்திர சேகரேந்திர ஸரஸ்வதி எனும் திருநாமத்துடன் தமது சிறுவயதில் பொறுப்பேற்ற ஸ்வாமிகள் அனைத்து க்ஷேத்ரங்களுக்கும் சென்று இறைவனை தரிசித்து பல அறப்பணிகளை செய்தார். ஸ்வாமிகள் பதினெட்டு மொழிகளில் புலமையுடையவர். ஆங்கிலம், கிரேக்கம், பிரெஞ்சு, லத்தீன் மொழிகளும் இதில் அடக்கம். அணு விஞ்ஞானத்திலிருந்து அத்வைத சித்தாந்தம் வரை அவர் கூறிய அரிய கருத்துக்கள் தெய்வத்தின் குரலாகவே போற்றப்பட்டு வருகிறது.

சனாதன தர்மநெறிகளின் வளர்ச்சிக்காகவும், திருக்கோயில் வளர்ச்சிக்காகவும், பண்டிதர்கள், கோயில் பூசாரிகள், போன்றோர்களுக்காகவும். பல அரிய பணிகளையாற்றியுள்ளார். பாரததேசமெங்கும் நடந்தே சென்று அந்த அந்த பகுதி மக்களை, அவர்கள் பண்பாட்டை. கலாச்சாரத்தை அறிந்து அவர்கள் நல்வாழ்விற்காக ஆசி வழங்கியுள்ளார். அவர் திருப்பாதம் தோயாத பகுதியே பாரதத்தில் இல்லையெனலாம். ஜாதி. சமய வேறுபாட்டை களைந்து மகாத்மா காந்தியின் சுதந்திரபோரட்டத்தின் போதிலிருந்து கதராடையணிந்தும், பிடி அரிசி திட்டம் போன்ற எளிய திட்டங்களை கொணர்ந்தும் அருளியுள்ளார். மகாத்மா காந்தி வினோபாபாவே, கிரீஸ் நாட்டு அரசகுடும்பம் நேபாள மன்னர் குடும்பம் முதல்இந்திரா நேரு. காமராசர், போன்றமக்கள் தலைவர்கள் பால்பிரண்டன், ராஜா ராமண்ணா போன்ற பலபேரரறிஞர்கள் கரியப்பா போன்ற ராணுவ தளபதிகள் என்று பலதரப்பட்டவரும் பணிந்து புகழ்பாடும் பரமாச்சார்யர் நடமாடும் தெய்வம் என எளிய மக்களால் போற்றப்படுகிறார். மாட்டுதொழுவத்தினருகில் முடிசார்ந்த மன்னரும் கலரிவீச சிறிய திண்ணையில் அமர்ந்து மோனத்தவம் செய்யும் அந்த மகானுக்கு உலகில் எந்த சமயத்தலைவருக்கும் இல்லாத முறையில் பக்தர்களால் ஐந்து முறை கனகாபிஷேகம் (தங்கத்தினால் அபிஷேகம். நடைபெற்றுள்ளது. அவற்றையும் தர்ம நெறிக்காகவே வழங்கியவர், பூதான இயக்கத்தில் பங்குகொண்டவர். மலை ஜாதி மக்களிலிருந்து) மாமன்னர்கள் வரை போற்றும் ஜகத்குரு அவர். 1954ல் தமது பிரதம சிஷ்யராக ஸ்ரீ ஜயேந்திர ஸரஸ்வதி ஸ்வாமிகளை அறிவித்து ஆசிரம உபதேசம் அருளினார். 1983ல் ஸ்ரீசங்கர விஜயேந்திர ஸரஸ்வதி ஸ்வாமிகளுக்கு ஆசிரம உபதேசமருளினார் 1993ல் நூறு வயதில் தம் தவவாழ்வில் சிவமயமாக வீற்றிருக்கும் ஞானி காட்சிக்கு எளியவராய், வேண்டுவோர்க்கு வரமருளும் வள்ளலாய், மதங்களுக்கு சாதி சமயங்களுக்கு அப்பாற்பட்டு ஆன்மீக மனித நேயத்தில் அனைவரையும் ஒற்றுமைப் படுத்திக்கொண்டிருக்கும் அந்த மஹா ஸ்வாமியின் புகழை கூறுவது என்பது கம்பன் கூறியது போல் பூனை பாற்கடலை தன் நாவினால் நக்கி முழுவதும் குடித்துவிட முடியும் என்று எண்ணுவது போலாகும். அவர் காலத்தில் வாழும் பாக்கியம் பெற்ற நாம் அவரது போதனைகளின் படி நடந்து நாமும், இவ்வையகமும் இன்புறவும், நமக்கு ஞான ஒளிகாட்டும் அம்மாமுனிவர் மேலும் ஒரு நூற்றாண்டு வாழ்ந்து நம்மை உய்விக்கவும் இறைவனை ப்ரார்த்திப்போமாக!



## ஸ்ரீ காஞ்சீ மாமுனிவர் துதி

தலமோங்கு கச்சியில் தவமோங்கு காமாட்சி
திருக்காம பீட அழகும்
தனியோங்கு தெய்வமாய் தண்ணருள் சுரக்கின்ற
ஏகம்ப நாதரழகும்
அழகோடு அழகாக ஆன குமரனவன்
ஆனந்த கோட்டமழகும்
பொலிவுடன் ஹஸ்தகிரி யதனில் வாழ் தேவனாம்
புகழ் கரி வரதளழகும்
சீரோடு சிறக்கின்ற சத்தியப்பதிதனில்
ஜெகமெலாம் ஒளிகொடுக்கும்
ஞாலத்தின் இருள் நீக்கி ஞானத்தை அருள்விக்க
மோனத்தவம் செய்திடும்
காஞ்சி வாழ்தெய்வமாய் கருணை மாமுனிவராய்
கண்டோர்கள் கொண்டாடிடும்
உயர்வான சங்கர உன்னத பீடத்தின்
ஜகத்குரு ஆசார்யரே
திருவருள் பெற்றிட மருள்எலாம் நீங்கிட
குருவருள் நீ அருள்வாய்
சந்திர சேகர திருநாமம் கொண்டருள்
சத்துலத் திருமணியே
நடமாடும் தெய்வமே நானிலம் போற்றிடும்
நற்றவக் குருமணியே
சீரான காஞ்சியில் சிவமாக வாழ்ந்திடும்
சிவஞான மோன மணியே.

இயற்றியவர்
புலவர் க. ஆத்ரேயசுந்தரராமன்

# ஸ்ரீ ஸ்தோத்ர சிந்தாமணி

## விக்நேசர் துதி

ஸுமுக2ச் சைகத3ந்தச்ச கபிலோ க3ஜகர்ணக : ।
லம்போ3 த3ரச்ச விகட : விக்4ந ராஜோ விநாயக : ॥
தூ4மகேது : க3ணாத்4யக்ஷ : பா3ல சந்த்ரோ க3ஜாநந : ।
வக்ர துண்ட3 : சூர்ப்ப கர்ண : ஹேரம்ப3 : ஸ்கந்த பூர்வஜ: ॥
(விநாயக புராணம்)

இதில் விக்நேச்வரருடைய 16 நாமாக்கள் இருக்கின்றன. இவை களை முதலில் சொல்லிவிட்டு எந்த காரியத்தை ஆரம்பித்தாலும் அந்தக் காரியம் விக்நமின்றி பூர்த்தியாகும்.

## ஸ்ரீ குருஸ்துதி

குரவே ஸர்வலோகானாம் பிஷஜே பவரோகிணாம் ।
நிதயே ஸர்வ வித்யானாம் ஸ்ரீ தக்ஷிணாமூர்த்தயே நமோ நம ॥
குருர் — நாம்நா மஹிம்நாச சங்கரோ யோவிராஜதே ।
ததீயாங்க்ரி கலத் ரேணு கணாயாஸ்து நமோ மம ॥

பெயரிலும் சங்கரராக, (சம் எனும் பேரின்பத்தை விளைவிக்கும் 'கர்த்தா'' என்பதான) மகிமையிலும் சங்கரராக, எவர் பிரகாசிக் கின்றாரோ, அவரது திருவடி சிந்தும் நுண்பொடிகளுக்கு என் வந்தனங்கள் உரித்தாகுக.

(ஸ்ரீ ஆதி சங்கரர் குறித்து ஸ்ரீ காஞ்சி மஹா பெரியவர்கள்)

## ஜ்வரமகல சிவ ஸ்துதி

பா3லாம்பி3கேச வைத்யேச ப4வரோக3 ஹரேதிச ।
ஜபேந்நாமத்ரயம் நித்யம் மஹாரோக3 நிவாரணம் ॥

இந் நாமாவை 108 முறை ஜபித்து விபூதி இட்டால் ஜ்வரம் அகலும்.

## சிவ ஸஹஸ்ர நாம புண்யம் பெற

சிவோ மஹேச்வரச்சைவ ருத்ரோ விஷ்ணு : பிதாமஹ :
ஸம்ஸார வைத்ய : ஸர்வேச ; பரமாத்மா ஸதா சிவ : ॥

இதை 3 முறை ஜபித்தால் சிவஸஹஸ்ர நாம பாராயணம் செய்த புண்ணியம் உண்டாகும்.

## நோயகல-விஷ்ணுஸ்துதி

அச்யுத அநந்த கோவிந்த நாம உச்சாரண பே'ஷஜாத் ।
நச்யந்தி ஸகலா : ரோக3ா : ஸத்யம் ஸத்யம் வத3ாமி
அஹம் ॥

இதை 108 முறை ஜபித்து/விபூதி இட்டால் நோய் அகலும். நீடித்த நோயானால் 40 நாள் ஜபிக்கவும்.

## ஹரிஹர ஸ்துதி

நமஸ்யே ஸ்தா2ணும் அநக4ம் நமஸ்யே வநமாலிநம் ।
நமஸ்யேலாங்க3லே சாநம் நமஸ்யேஹம் ச்ரிய : பதிம் ॥
(கூர்மம்)

சிவனையும் விஷ்ணுவையும் நமஸ்காரம் செய்கிறேன் என்ற இதை ஜபித்து நமஸ்காரம் செய்தால் ஸர்வ பயமும் அகலும்.

## கல்வி வளர, பரீக்ஷையில் தேற

பா4ஷ்யாதி3 ஸர்வசாஸ்த்ராணி யேசான்யே நியமா :
ததா2 ।
அக்ஷராணிச ஸர்வாணி த்வந்து தேவி நமோஸ்து தே ॥
(கூர்மம்)

பாஷ்யம் முதலிய ஸகல சாஸ்திரங்களாயும் நியமமாகவும் ஸர்வ அக்ஷரங்களாயும் உள்ள தேவிக்கு நமஸ்காரம். இதை காலையில் 8 முறை ப்ரதி திநம் ஜபித்தால் கல்வி நன்கு வளரும். பரீக்ஷையில் தேருவர்.

## லக்ஷ்மீ கடாக்ஷம் பெற, வேலை கிடைக்க

ஸ்ரீதேவீஹி அம்ருதோத்3 பூ4தாகமலாசந்த்ர சோப3நா
விஷ்ணுபத்நீ வைஷ்ணவீச வராரோஹாச சார்ங்கி3ணீ
ஹரிப்ரியா தேவதேவீ மஹாலக்ஷ்மீச ஸுந்த3ரீ ॥
(ஆக்நேயம்)

லக்ஷ்மீ ஹ்ருதயம் என்ற இதைக் குருமுகமாக உபதேசம்பெற்று அல்லது ஸ்வாமி படத்தின் அடியில் புத்தகத்தை வைத்து ப்ரதிதிநம் காலையில் 10 முறை வெள்ளிக்கிழமை மாலையில் நெய் தீபம் ஏற்றி அதில் லக்ஷ்மீ பூஜை செய்து 108 முறை ஜபித்தால் செல்வம் உண்டாகும். வேலை கிடைக்கும்.

## சீக்கிரம் விவாஹம் ஆக

ஜநகஸ்ய வச ச்ருத்வா பாணீன்பாணிபி4 : அஸ்ப்ருசன் ।
சத்வாரஸ்தே சதஸ்ருணாம் வஸிஷ்ட2ஸ்ய மதேஸ்தி2தா ॥ :

ஜநகருடைய வார்த்தையைக்கேட்டு வஸிஷ்டர் உத்திரவுப்படி ராமன் முதலிய நாலுபேரும் ஸீதை முதலிய நாலுபேருடைய கைகளைப் பிடித்தார்கள். இதைக் கன்யைகளோ அவர்கள் மாதா பிதாக்களோ நித்யம் காலையில் ராம பூஜை செய்து 108 முறை ஜபித்தால் சீக்கிரமாக விவாஹம் கைகூடும். சக்தி உள்ளவர் குரு மூலம் உபதேசம் பெற்று ராமாயண பாலகாண்டம் 73-வது ஸர்க்கம் பூராவாகப் பாராயணம் செய்தால் உடனே பலன் உண்டாகும்.

## மலடு தோஷம் நீங்க

ப்ராம்மம் பாத்மம் வைஷ்ணவஞ்ச சைவம் ப$^{4}$ாகவதம் தத$^{2}$ா ।
ப$^{4}$விஷ்யம் நாரதீ$^{3}$யஞ்ச மார்க்கண்டேயம் அத: பரம் ॥
ஆக்நேயம் ப்ரம்ம வைவர்த்தம் லிங்கம் வாராஹ மேவச ।
ஸ்காந்தஞ்ச வாமநம் கௌர்மம் மாத்ஸ்யம் கா$^{3}$ருட மேவச ।
ப்ரும்மாண்டஞ்ச புராணநி பட$^{2}$தாம் புத்ரத$^{3}$ாநிச ॥

இந்த 18 புராணங்களின் பெயரை நித்யம் ஒருமுறையும் கார்த்திகை மாதம் சுக்லபக்ஷ த்வாதசியில் 108 முறையும் ஜபித்தால் மலடு தோஷம் அகன்று புத்ரன் பிறப்பான்.

## ஏழ்மை அகல

யது$^{3}$த்$^{4}$ப$^{4}$வா: ஸத்வரஜஸ் தமோகுணா: ஸர்க்க$^{3}$
ஸ்தி$^{2}$தித்$^{4}$வம்ஸ நித$^{4}$ாந காரிணா: ।
யதி$^{3}$ச்சயா விச்வமித$^{3}$ம் ப$^{4}$வாப$^{4}$வள தநோதி
மூலப்ரக்ருதிம் நதாஸ்மதாம் ॥

(பாத்மம்)

எந்த மூலப்ரக்ருதியினிடமிருந்து உண்டான ஸத்வம், ரஜஸ், தமஸ் என்ற மூன்று குணங்கள் உலகைப் படைத்து பரிபாலித்து ஒடுக்குகின்றனவோ, எவ்ளது விருப்பதால் இவ்வுலகும் நல்வினைத் தீவினைகளைச் செய்கிறதோ அவளை வணங்குகிறோம். நியமத்துடன் இருவேளைகளிலும் 3 முறை கூறினால் தாரித்ர்யம் அகலும்.

## ஸங்கடம், மநக்கவலை அகல

நமோ மத்ஸ்ய கூர்மாதீ$^{3}$ நாநாஸ்வ ரூபை:
ஸதா$^{3}$ ப$^{4}$க்த கார்ய: உத்$^{3}$யதாய ஆர்த்ரி ஹந்த்ரே ।
விதா$^{4}$ த்ராதீ$^{3}$ ஸர்க்க$^{3}$ ஸ்தி$^{2}$தி த்$^{4}$வம்ஸ கர்த்ரே
க$^{3}$த$^{3}$ா சங்க$^{3}$ பத்$^{3}$மாரி ஹஸ்தாய தேஸ்து ॥

(பவிஷ்யம்)

மத்ஸ்யம் முதலிய அவதாரங்களால் பக்தர் துன்பத்தை அகற்றுபவரும், பக்தர் பணியில் ஊக்கமுள்ளவரும் ப்ரும் மாதிகளைக், கொண்டு ஸ்ருஷ்டி முதலியவைகளை நடத்து பவரும், சதை முதலியவைகளைத் தரித்தவருமான உமக்கு நமஸ்காரம். இருவேளைகளிலும் 3 முறை ஜபித்தால் ஸகல விதமான ஸங்கடங்களும் அகலும்.

## காரியம் ஜயம் உண்டாக

ஸ்துதா ஸித்வம் மஹாதேவி விசுத்தே$^{4}$ந அந்தராத்மனா ।
ஜயோ ப$^{4}$வது மே நித்யம் ஸர்வ கார்யே ப்ரஸாதத: ॥

ஓ மஹாதேவி ! நீ எல்லோராலும், என்னாலும் சுத்த மநதுடன் துதிக்கப்பட்டாய். உனதருளால் ஸகல கார்யத்திலும் ஜயமுண்டாகட்டும். எந்த கார்யத்தை ஆரம்பித்தாலும் இதை 10 முறை ஜபித்தால் ஜயமுண்டாகும்.

## மறதி அகல, ஞாபகசக்தி வளர

யாதேவீஸர்வ பூ$^{4}$தேஷு ஸ்ம்ருதிரூபேண ஸம்ஸ்தி$^{2}$தா ।
நமஸ் தஸ்யை நமஸ் தஸ்யை நமஸ் தஸ்யை நமோ நம: ॥

எல்லா பிராணிகளிடமும் ஞாபகசக்தி வடிவமாக இருக்கும் தேவியை நமஸ்கரிக்கிறேன், அதை நித்யம் 108 முறை காலையில் ஜபித்தால் மறந்துபோகும் குணம் அகன்று நல்ல ஞாபக சக்தி உண்டாகும்.

## ஆபத்து அகல

ஆபதாம் அபஹர்தாரம் தா$^{3}$தாரம் ஸர்வ ஸம்பதா$^{3}$ம் ।
லோகாபி ராமம் ஸ்ரீராமம் பூ$^{4}$யோ பூ$^{4}$யோ நமாம் யஹம் ॥

ஆபத்தை அகற்றி ஸம்பத்தைத் தருபவரும் உலகில் அழகுள்ளவருமான ராமனைப் பலமுறை நமஸ்கரிக்கிறேன். நித்யமே 10 முறையும் ஆபத்து வந்தபோது 1008 முறையும் ஜபித்தால் பெரிய ஆபத்து அகலும்.

## இஷ்டம் பூர்த்தியாக

ஏகம் ப்$^{3}$ரம்மைவ அத்$^{3}$விதீயம் ஸமஸ்தம் ஸத்யம் ஸத்யம்
நேஹ நாநாஸ்தி கிஞ்சித் ।

ஏகோ ருத்ரோ நத்$^{3}$விதீயாய தஸ்தே$^{2}$ தஸ்மாத் ஏகம் த்வாம்
ப்ரபத்$^{3}$யே மஹேசம் ॥

இரண்டாக இல்லாமல் ஒன்றாக எங்குமிருப்பது ப்ரும்மம். இதே உண்மை. பலவாகக் காணப்படுவது பொய். ஒன்றாக இருப்பவன் ருத்ரனே. அப்படிப்பட்ட உன்னைச் சரணமடைகிறேன். இதைக் காலையில் சுத்தனாக 108 முறை ப்ரதி தினம் ஜபித்தால் ஒரு மண்டலத்தில் விரும்பிய கார்யம் கைகூடும்.

## பாபமகல

விஷ்ணும் நாராயணம் க்ருஷ்ணம் மர்த$^{4}$வம்-மது$^{4}$ஸூத$^{3}$நம்
ஹரிம் நரஹரிம் வந்தே$^{3}$ கோவிந்தம் ததி$^{3}$ வாமநம் ||

ப்ரதிதிநம் அதிகாலையில் எழுந்தவுடன் படுக்கையில் இதை மூன்று முறை கூறினால் முதல்நாள் செய்த பாபம் நீங்கும்.

## தீராத நோயகல

ஓம் நம: பரமார்த்த$^{3}$ாய புருஷாய மஹாத்மநே |
அரூபபஹுரூபாய வ்யாபிநே பரமாத்மநே ||

(ஆக்நேயம்)

இதை ப்ரதி திநம் காலையில் சுத்தனாக 1008 முறை ஜபம் செய்தால் ஒரு மண்டலத்திற்குள் தீராத மஹா ரோகமும் அகலும்.

## கெட்ட கனவு அகல

அச்யுதம் கேசவம் விஷ்ணும் ஹரிம் ஸத்யம் ஜநார்த$^{3}$நம் |
ஹம்ஸம் நாராயணம் க்ருஷ்ணம் ஜபேத் து$^{3}$ஸ்வப்ந சாந்தயே |

இரவில் படுக்கும்போது இதை 3 முறை ஜபித்தால் கெட்டகனவு தோன்றாது. துஸ்வப்நம் கண்டவர் காலையில் எழுந்தவுடன் ஒருவருடனும் பேசாமல் அந்த கனவைப் பசுவின் காதில் கூறிவிட்டு இதை 3 முறை ஜபித்தால் கெட்ட பலன் தோன்றாது.

## பகவானிடம் ப்ரார்த்திக்க வேண்டியது

அநாயாஸேந மரணம் விநா தைன்யேந ஜீவநம் |
தே$^{3}$ஹிமே க்ருபயா சம்போ$^{4}$ த்வயி பக்திம் அசஞ்சலாம் |

ஆயாசமில்லாத மரணம், ஏழ்மை இல்லாத பிழைப்பு. உம்மிடத்தில் மாறாத பக்தி இவைகளைக் கொடும் ப்ரபோ !

## ப்ரதக்ஷிணம் செய்ய

யாநி காநிச பாபாநி ஜன்மாந்தரக்ருதாநிச |
தாநி தாநி ப்ரணச்யந்தி ப்ரதக்ஷிண பதே$^{3}$ பதே$^{3}$ ||

ஜன்மாந்தரத்தில் செய்த சகல பாபங்களும் ப்ரதக்ஷிணத்தால் அகலட்டும்.

## முக்தி இடங்கள்

த$^{3}$ர்சநாத் அப்ர ஸ்தஸி ஜந்நாத் கமலாலயே |
காச்யாந்து மரணாத் முக்தி: ஸ்மரணாத் அருணாசலே ||

திருவாரூரில் பிறப்பதாலும், சிதம்பர தர்சநத்தாலும் திருவண்ணாமலையை நினைப்பதாலும் காசியில் இறப்பதாலும் முக்தி உண்டாகும்.

## மஹா பாபங்கள் அகல

ஸாவித்ரீ வேத$^{3}$மாதாச கா$^{3}$யத்ரீ ச ஸரஸ்வதீ |
ஸாங்க்ரிதி ப்$^{3}$ராம்மணீ ஸாத்$^{4}$வீ ஸத$^{3}$ாஸர்வ அர்த்த ஸாதி$^{3}$நீ
ஸஹஸ்ராக்ஷீதி நாமாநி ஜபாத் பாப ஹராணிச ||

(கருடபுராணம்)

## கர்மாவைப் பகவத் அர்ப்பணம் செய்ய

காயேந வாசா மநஸேந்த்ரியைர்வா |
பு$^{3}$த்$^{4}$யாத்மநாவா ப்ரக்ருதே: ஸ்வபாவாத் ||
கரோமி யத்$^{3}$யத் ஸகலம் பரஸ்மை |
நாராயணாய இதி ஸமர்ப்பயாமி ||

உடல் வாக்கு மநம் இந்த்ரியம் புத்தி ஜீவன் ப்ரக்ருதி இவைகளால் எதைச் செய்கின்றேனோ அதை எல்லாம் ஸ்ரீ நாராயணனுக்கே அர்ப்பணம் செய்கின்றேன்.

எமது நல் வாழ்த்துக்கள் !

**K. மாணிக்கம்**
அடகு வியாபாரம்

G. S. T. ரோடு, நந்திவரம் பஜார்,
(கூடுவாஞ்சேரி நுழைவு வாயில் அருகில்)
கூடுவாஞ்சேரி-603 202.